இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்

# இயேசுவை தினம் பார்க்கிறேன்

VOL 24 ISSUE 5 MAY-2024

ஆண்டு சந்தா 100/- தனிப்பிரதி 10/-

## காணாமல் போனவற்றை கண்டுபிடியுங்கள்



இயேசுவை தினம் பார்க்கிறேன் மே 2024 மாதப் பத்திரிக்கை இப்பொழுது Digital முறையில் நம்முடைய இணையதளத்திலும்

WWW.JESUSLIVES.IN

# செம்பட்டியில் இயேசுவின் பாதத்தில்

# ஆசீர்வாத உபவாச ஜெபம்

**மே 10**
இரண்டாவது
வெள்ளிக்கிழமை
காலை 9.30 மணி
முதல் 2.30 மணி
வரை



தேவ செய்தியாளர்கள்
சகோதரர். **எல். வின்சென்ட்ராஜ்**
சகோதரி. **கலா வின்சென்ட்ராஜ்**

**மே 11**
இரண்டாவது
சனிக்கிழமை
காலை 9.30 மணி
முதல் 2.30 மணி
வரை

**இடம் : வானத்தின் வாசல், எழுப்புதல் ஜெப மையம், செம்பட்டி, திண்டுக்கல்**

---

மதுரை மாவட்ட அனைத்து திருச்சபைகள் மற்றும்
இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் இணைந்து நடத்தும்

# மதுரையில் எழுப்புதல்

# உபவாச ஜெபம்



**மே 18**
**மூன்றாவது சனிக்கிழமை**
**காலை 9.30 - 2.30 மணி**



தேவ செய்தியாளர்கள்
சகோதரர். **L. வின்சென்ட்ராஜ்**
சகோதரி. **கலா வின்சென்ட்ராஜ்**

இடம் : **இயேசு அழைக்கிறார் ஜெபகோபுரம், பைபாஸ் ரோடு, பழங்காநத்தம், PRC Depot அருகில், மதுரை.**

# ஆசிரியர் மடல்

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த மாத இதழ் மூலமாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். **ஏசாயா 25:4-ல் கொடூரமானவர்களின் சீறல் மதிலை மோதியடிக்கிற பெருவெள்ளத்தைப் போல் இருக்கையில், நீர் ஏழைக்குப் பெலனும், நெருக்கப்படுகிற எளியவனுக்குத் திடனும், பெருவெள்ளத்துக்குத் தப்பும் அடைக்கலமும், வெயிலுக்கு ஒதுங்கும் நிழலுமானீர்** என்று சொல்லப்பட்ட வார்த்தையின்படி கொடூரமான வெயிலின் மத்தியில் நாம் போய்க் கொண்டிருக்கிறோம். இப்படிப்பட்ட சூழ்நிலையில் தேவன் தாமே நமக்கு குளிர்ந்த சீதோசன நிலையை தரமுடியும். தானியேலுடைய மூன்று நண்பர்கள் அக்கினியில் விழுந்த போது குளிர்ந்த காற்றை அனுப்பினவர், நமக்கும் குளிர்ந்த காற்றை அனுப்புவார். கடந்த ஏப்ரல் 9-ஆம் தேதி முதல் 12-ஆம் தேதி வரை நடைபெற்ற சுவிசேஷப் பயிற்சி முகாமை தேவன் அளவில்லாமல் ஆசீர்வதித்தார். முகாமிற்கு வந்த எல்லா தேவ ஊழியர்களையும் தேவன் வல்லமையாகப் பயன்படுத்தினார். முகாமில் கலந்து கொண்ட எல்லா தேவ பிள்ளைகளுக்குள்ளும் தேவன் ஒரு தாக்கத்தையும், எழுப்புதலையும் ஏற்படுத்தினார். தொடர்ந்து இதேபோல் அடிக்கடி சுவிசேஷப் பயிற்சி முகாமை நடத்தி தேவனுடைய ராஜ்யத்தை எல்லா இடங்களிலும் அறிவிக்கவும், தேவன் எல்லாரையும் பயன்படுத்த ஜெபித்துக் கொள்ளுங்கள். தேவ கிருபையினால் வானத்தின் வாசல் எழுப்புதல் ஜெப மையத்தில் வைத்து நடைபெறும் உபவாச ஜெபங்களும், ஒவ்வொரு மாதமும் மூன்றாவது சனிக்கிழமை மதுரையில் வைத்து நடைபெறும் எழுப்புதல் உபவாச ஜெபமும் மிகுந்த ஆசீர்வாதமாக நடைபெறுகிறது. தொடர்ந்து நமது மீடியா ஊழியங்களுக்காக, பத்திரிக்கை ஊழியங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். நம் மூலமாக கர்த்தருடைய வசனம் இந்த பூமியெங்கும் பரவி மகிமை அடைவதாக. உங்கள் ஜெபத்தாலும், காணிக்கைகளினாலும் இந்த ஊழியத்தை தாங்க, மறவாதிருங்கள். கர்த்தருடைய மாறாத கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக.



*இயேசுவின் பணியில்,*

L. Vincentraj

(சகோ. L. வின்சென்ட்ராஜ்)

# காணாமல் போனவற்றை கண்டுபிடியுங்கள்



சகோ. L. வின்சென்ட்ராஜ்

**லூக் 15:4 - ஒரு மனுஷன் நூறு ஆடுகளை உடையவனாயிருந்து, அவைகளில் ஒன்று காணாமற்போனால், தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் வனாந்தரத்திலே விட்டு, காணாமற் போன ஆட்டைக் கண்டுபிடிக்குமளவும் தேடித் திரியானோ?** என்று சொல்லப்பட்டுள்ளது. காணாமற்போன மனிதர்களைக் கண்டுபிடிக்க வந்தவர் இயேசு. இந்த அதிகாரம் முழுவதிலும் ஆண்டவராகிய இயேசு தான் இந்த பூமியில் நிறைவேற்ற வந்த தேவ திட்டத்தை இங்கு சொல்லியிருக்கிறார். இன்றைக்கு உலகில் பல விமானங்கள் விழுந்து நொறுங்கி காணாமற் போனது அதை தேடியும் இன்றைக்கு வரை மீட்க முடியவில்லை. தொலைந்தால் தொலைந்தது தான், காணாமற் போனால் காணாமற்போனது தான். ஆனால் தேவனுடைய காரியங்களில் அப்படியல்ல, அதை கண்டுபிடிக்கும் வரை, மீட்கும் வரை தேடிக் கொண்டே இருப்பார். **இயேசு சொன்னார் லூக் 19:10-ல் இழந்து போனதைத் தேடவும், இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார் என்றார்.**

இழந்ததைத் தேட வந்த ஆண்டவராகிய தேவன் மனிதனை சிருஷ்டித்துப் படைத்து ஏதேன் தோட்டத்தில் தம்மோடு வைத்திருந்தார். நீ என்னோடு இருக்க வேண்டும், என்னை விட்டு விலகக்கூடாது, பிரியக்கூடாது என்று வைத்திருந்தார். ஆனால் சாத்தான் மனிதனை ஏமாற்றி, வஞ்சித்து தேவனிடத்திலிருந்து பிரித்து, அவர் சமூகத்திலிருந்து காணாமற்போகப் பண்ணிவிட்டான். அதனால் தான் இன்றைக்கு அநேகரை தேவ சமூகத்தில் காண முடியவில்லை. ஜெபத்தில் பார்க்க முடிவதில்லை, பத்திரமாய், பாதுகாப்பாய் இருக்க வேண்டியவர்களை காணாமற்போகப் பண்ணி, தொலைத்து விட்டு ஒன்றும் தெரியாதவர்கள் போல இருக்கிறோம். சிம்சோன், தேவன் தன்னை விட்டு விலகினதை அறியாமல் இருந்தது போல இருக்கிறார்கள். அநேகம் பேருக்கு எனக்கு எல்லாம் இருக்கு, நான் நல்லா இருக்கிறேன், பத்திரமாய் இருக்கிறேன், சரியாய் இருக்கிறேன் என்ற எண்ணத்திலே எதை இழந்தோம், எதை தொலைத்தோம், எது காணாமற்போனது என்று தெரியாமல் ஓடிக்கொண்டே இருக்கிறோம். என்றைக்கு இல்லை, காணாமற் போய் விட்டது, தொலைந்து போய் விட்டது, வெறுமையாய் இருக்கிறது, ஒரு நிறைவு இல்லை என்று உணருகிறோமோ அன்றைக்குத் தான் நாம் தேட ஆரம்பிப்போம். சங்கீதக்காரர் சொல்லுகிறார் **சங் 119:176-ல் காணாமற்போன ஆட்டைப் போல வழிதப்பிப் போனேன், உமது அடியேனைத் தேடுவீராக.** ஆம் வழிதப்பி நடந்து, சுயபுத்தியில் சாய்ந்து, தேவன் வைத்த இடத்தில் இல்லாமல் அவருடைய கைக்குள் அடங்கி இராமல், அவர் சமூகத்தை விட்டு விலகி வெளியே போய்க் கொண்டிருக்கிற அல்லது உலக காரியங்களுக்காக, நமது வசதி வாய்ப்புகளுக்காக விற்றுப்போட்ட ஒரு வாழ்க்கை வாழ்கிறோம்.

யோசேப்பின் வாழ்க்கையைப் பாருங்கள் அவனுடைய சகோதரர்கள் அவன் மேல் பொறாமை கொண்டு இருபது வெள்ளிக் காசுக்கு விற்றுப் போட்டார்கள். உண்மையிலே விற்றது யோசேப்பை அல்ல பரிசுத்தத்தை, அவனுக்குள் இருந்த தேவ பயத்தை, தேவ ஞானத்தைத் தான் விற்றார்கள். கடத்தி விற்றுவிட்டு தொலைத்துவிட்டு தகப்பனுக்கு கொடிய மிருகம் பீறிட்டது என்ற தவறான தகவல்களைச் சொல்லி விட்டார்கள். பஞ்சத்திலே உணவு வாங்க எகிப்திற்குப் போன போது யோசேப்பு யார் என்று தெரியாமல் அவரிடத்தில் எங்களில் ஒருவன் காணாமற் போனான் என்று துணிகராமாய் சொல்லுகிறார்கள். **ஆதி 42:13-ல் உமது அடியாராகிய நாங்கள் பன்னிரண்டு சகோதரர், கானான் தேசத்தில் இருக்கிற ஒரு தகப்பபன் புத்திரர், இளையவன் இப்பொழுது எங்கள்**

**தகப்பனிடத்தில் இருக்கிறான், ஒருவன் காணாமற் போனான்** என்று அவரிடத்தில் துணிகரமாய் தாங்கள் தொலைத்ததை, விற்றதைச் சொல்லாமல் காணாமற் போனான் என்று சொல்லுகிறார்கள். திரும்ப அவரைத் தேடவோ, கண்டுபிடிக்கவோ அவர்கள் எந்த ஒரு முயற்சியும் எடுக்கவில்லை. காலமும், வருஷமும் தான் ஓடிக் கொண்டே இருந்தது. ஆனால் தேவன் நல்லவர், மனிதர்கள் மறந்தாலும், கைவிட்டாலும் கர்த்தர் மறக்காதவர், நம் நினைவாக இருப்பவர். அவர் நம்மைத் தேடி வந்தார், நம்மை வாழ வைத்தார், இன்றைக்கு நாம் உயிரோடு இருப்பது, நிர்மூலமாகாமல் இருப்பது அவருடைய கிருபை. அவரால் தான் நாம் வாழ்கிறோம், பிழைக்கிறோம், ஜீவிக்கிறோம்.

**எசேக் 16:4-6-ல் உன் பிறப்பின் வர்த்தமானம் என்னவென்றால், நீ பிறந்த நாளிலே உன் தொப்புள் அறுக்கப்படவுமில்லை, நீ சுத்தமாவதற்குத் தண்ணீரினால் குளிப்பாட்டப் படவுமில்லை, உப்பால் சுத்திகரிக்கப்படவுமில்லை, துணிகளில் சுற்றப்படவுமில்லை, உனக்காகப் பரிதபித்து, இவைகளில் ஒன்றையாகிலும் உனக்குச் செய்ய ஒரு கண்ணும் உன் பேரில் இரக்கமாயிருந்ததுமில்லை. நீ பிறந்தநாளில் நீ அருவருக்கப்பட்டதினால் வெளியில் எறிந்து விடப்பட்டாய். நான் உன் அருகே கடந்து போகும் போது, மிதிக்கப்படுவதற்கு ஏதுவாய் நீ உன் இரத்தத்தில் கிடக்கிறதைக் கண்டு, உன் இரத்தத்தில் கிடக்கிற உன்னைப் பார்த்து, பிழைத்திரு என்றேன்** என்றார்.

ஆம் மிதிக்கப்படுவதற்கு, சாவதற்கு ஏதுவாக கிடந்த நம்மை ஆண்டவராகிய இயேசு தேடி வந்து, தமது சொந்த இரத்தத்தைச் சிந்தி, தமது உயிரைக் கொடுத்து நம்மை மீட்டு நாம் பிழைத்திருக்கவும், வாழவும் செய்திருக்கிறார். அவர் மட்டும் இந்த பூமிக்கு வரவில்லை என்றால் நாம் எப்பவோ மடிந்து மண்ணோடு மண்ணாகப் போயிருப்போம். ஆம் அவர் நம்மைத் தேடி வந்து காணாமற் போன நம்மைக் கண்டு பிடித்து இன்றைக்கும் அவர் சமூகத்தில் வாழவும், பிழைக்கவும் வைத்திருக்கிறார். நாம் அவரால் தேடி கண்டு பிடிக்கப்பட்டவர்கள், மீட்கப்பட்டவர்கள். அதனால் தான் நாம் நிர்மூலமாகாமல் உயிர் வாழ்கிறோம். அவர் சமூகத்தில் ஜெபிக்கிறோம், அவரால் வழிநடத்தப்படுகிறோம். போகட்டும் எதை மனிதர்கள் தொலைத்தார்கள், எதை தேட வேண்டும், மீட்க வேண்டும் எப்படி இழந்ததை மீட்டுக் கொள்ள வேண்டும் என்பதைப் பார்ப்போம்.

## காணாமற்போன ஆடுகள்

**லூக் 15:4 ஒரு மனுஷன் நூறு ஆடுகளை உடையவனாயிருந்து, அவைகளில் ஒன்று காணாமற்போனால், தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் வனாந்தரத்திலே விட்டு காணாமற் போன ஆட்டைக் கண்டுபிடிக்குமளவும் தேடித் திரியானோ?** என்று சொல்லப்பட்டுள்ளது. ஆட்டுக்கு ஒரு பழக்கம் உண்டு ஆயன், மேய்ப்பன் இல்லை என்றால் அது இஷ்டத்திற்குப் போய் விடும். இஷ்டத்திற்குப் போவது பிரச்சனை அல்ல. காணாமலே, தொலைந்து கொடிய மிருகங்களுக்கு இரையாகி விடும் பாதுகாப்பில்லாத ஜீவன். ஆண்டவராகிய இயேசு சொன்னார் **ஏசாயா 53:6-ல் நாமெல்லாரும் ஆடுகளைப் போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன் தன் வழியிலே போனோம், கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்.** தேவனை விட்டுப் பிரிந்து வழி தப்பி கொடிய மிருகங்களிடத்தில் சிக்கிக் கொண்டோம். காரணம் நமக்கு மேய்ப்பன் இல்லை, ஆயன் இல்லை, நம்முடைய ஆத்துமாவை வழிநடத்த பரிசுத்த ஆவியானவர் இல்லை, கோலும் தடியும் நமக்கு இல்லை. ஆகவே கொடிய மிருகங்கள் நம்மை வேட்டையாடி நாம் பாதிக்கப்பட்டுப் போனோம்.

**எசேக் 34:5-8-ல் மேய்ப்பன் இல்லாததினால் அவைகள் சிதறுண்டு போயின, சிதறுண்டு போனவைகள் காட்டு மிருகங்களுக்கெல்லாம் இரையாயின. என் ஆடுகள் சகல மலைகளிலும் உயரமான சகல மேடுகளிலும் அலையுண்டு, பூமியின்மீதெங்கும் என் ஆடுகள் சிதறித் திரிகிறது; விசாரிக்கிறவனுமில்லை, தேடுகிறவனுமில்லை. ஆகையால் மேய்ப்பரே, கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள். கர்த்தராகிய ஆண்டவராயிருக்கிற நான் என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்; மேய்ப்பன் இல்லாததினால் என் ஆடுகள் சூறையாகி, என் ஆடுகள் காட்டுமிருகங்களுக்கெல்லாம் இரையாய்ப் போயின; என் மேய்ப்பர்கள் என் ஆடுகளை விசாரியாமற்போனார்கள், மேய்ப்பர்கள் மந்தையை மேய்க்காமல் தங்களை மேய்த்தார்கள்.** மேய்ப்பன் இல்லாததினால் என் ஆடுகள் காட்டு மிருகங்களுக்கெல்லாம் இரையாயின. இப்படி வழி தப்பின ஆடுகளை காப்பாற்றவும், கண்டுபிடிக்கவும் தான் இயேசு கிறிஸ்து இந்த பூமிக்கு இறங்கி வந்தார். **எசேக் 34:16-ல் நான் காணாமற் போனதைத் தேடி, துரத்துண்டதைத் திரும்பக் கொண்டு வந்து, எலும்பு முறிந்ததைக் காயங்கட்டி**

**பாதுகாப்பேன் என்றார்.** ஆம் நாம் அவருடைய கைகளில் உள்ள ஆடுகளாய் இருக்க வேண்டும். இல்லை என்றால் சிதறடிக்கப்படுவோம், காணாமற்போவோம், தொலைந்து போவோம் என்று சொல்லப்பட்டுள்ளது.

அதனால் தான் தாவீது சொல்லுகிறார் **கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார், நான் தாழ்ச்சியடையேன்.** ஆம் அவர் நம் மேய்ப்பன், ஆயன். நாம் தாழ்ச்சியடையாதபடிக்கு, வஞ்சிக்கப்படாதபடிக்கு காணாமற்போகாதபடிக்கு அவருடைய சமூகத்தில் வாழ்ந்திருக்கிற, பிழைத்திருக்கிற ஆடுகளாய் காணப்பட வேண்டும். ஏன் தொண்ணூற்றொன்பது ஆடுகளை விட்டுவிட்டு, ஒரே ஒரு ஆட்டைத் தேடினார் என்றால் அந்த 99 ஆடுகளும் மனம் திரும்ப அவசியமில்லாத ஆடுகள். தாங்கள் செய்வது சரி, மற்றவர்கள் செய்வது சரியல்ல என்று சொல்லுகிற ஆடுகள். அதனால் தான் மனந்திரும்ப அவசியமில்லாத 99 ஆடுகளைப் பற்றி கவலைப்படாமல் மனந்திரும்புகிற ஒரு ஆட்டின் நிமித்தம் மிகுந்த சந்தோஷம் உண்டாகும் என்றார். இன்றைக்கு மனந்திரும்புகிற ஆடாய் இயேசுவுக்கு அர்ப்பணித்த ஒப்புக் கொடுக்கப்பட்ட ஆடாய் வாழும் போது தான் நாம் தேவனுடைய பார்வையில் தூக்கி விடப்படுவோம், கண்டுபிடிக்கப்படுவோம். அப்பொழுது தான் மந்தையில் சேர்க்கப்படுவோம். அவருடைய கைகளில் உள்ள ஆடுகளாய் இருப்போம், தோள்மேல் சுமத்தப்பட்ட ஆடுகளாய் இருப்போம், கண்டுபிடிக்கப்பட்ட ஆடுகளாய் இருப்போம். நாம் தொலைந்து போனவர்களாய், தேவ சமூகத்தை விட்டு ஓடினவர்களாய் கொடிய மிருகங்களின் கைகளில் அகப்பட்ட ஆடுகளாய் அல்ல, அவரே நமக்காக ஒரு ஆட்டுக் குட்டியைப் போல பூமிக்கு இறங்கி வந்தார்.

ஆபிரகாம் தன் மகன் ஈசாக்கைப் பலியிட சென்ற போது அங்கு தேவ சத்தம் உண்டாகி, உன் மகனாகிய ஈசாக்கை பலியிட வேண்டாம், உன் மகனுக்குப் பதிலாக இதோ முட்புதரில் ஒரு ஆட்டுக்குட்டி மாட்டிக் கொண்டு நிற்கிறது அதைப் பிடித்துப் பலியிடு என்றார். நமக்காக அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் பலியானார். **யோவான் 1:29-ல் இதோ உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி** இவரே என்று யோவான்ஸ்நானகன் சொல்லுகிறார். இன்றைக்கு அவருக்கு, ஆடுகளின் நிலமை நன்றாகத் தெரியும். கொடிய மிருகங்களின் மத்தியில், தண்ணீர் அற்ற நிலையில், மேய்ச்சல் அற்ற நிலையில் எப்படி கண்காணிக்க வேண்டும், எப்படி பாதுகாக்க வேண்டும் என்று ஒரு மேய்ப்பனாய் இருந்து கட்டாயம் தொலைந்துபோன, காணாமற்போன இந்த ஆட்டைக் கண்டு பிடித்து அவருடைய ராஜ்யத்தில் கொண்டு வந்து சேர்ப்பார். அதற்காகத் தான் அவர் உலகத்தின் பாவங்களை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியாக வந்தார். அதைத்தான் அவருடைய சீஷர்களுக்கும் கட்டளையிட்டு அதை தேடுங்கள் என்றார். மத் 10:6-ல் காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்தில் போங்கள் என்றார். இன்றைக்கு இந்த செய்தியை வாசித்துக் கொண்டிருக்கும் என் அன்பு சகோதரர்களே, சகோதரிகளே நீங்கள் அவர் சமூகத்தில் தேடப்பட்ட, கண்டுபிடிக்கப்பட்ட ஆடுகளாய், அவருடைய கண்காணிப்பில் உள்ள ஆடுகளாய், தேவன் உங்களை மாற்றி, அவரால் நீங்கள் வழிநடத்தப்பட்ட, அவர் உங்களுக்கு ஆயனாக, மேய்ப்பனாக இருப்பாராக. அவர் சமூகத்தில் வாழ்கிறவர்களாக, பிழைத்திருக்கிறவர்களாக தேவன் நம்மை மாற்றுவாராக.

## காணாமற்போன வெள்ளிக்காசு

**அன்றியும், ஒரு ஸ்திரி பத்து வெள்ளிக் காசை உடையவளாயிருந்து, அதில் ஒரு வெள்ளிக்காசு காணாமற் போனால், விளக்கைக் கொளுத்தி, வீட்டைப் பெருக்கி, அதை கண்டுபிடிக்கிற வரைக்கும் ஜாக்கிரதையாய்த் தேடாமலிருப்பாளோ?, கண்டுபிடித்த பின்பு..... காணாமற்போன வெள்ளிக்காசைக் கண்டு பிடித்தேன், என்னோடுகூடச் சந்தோஷப்படுங்கள் என்பாள் அல்லவா?. லூக் 15:8,9.** காணாமற் போன ஆடு, அதை எப்படி கண்டுபிடித்தார் என்பதைப் பார்த்தோம். அடுத்ததாக காணாமற்போன வெள்ளிக்காசு. இஸ்ரவேலில் ஒரு பழக்கம் உண்டு, ஒரு மணப்பெண்ணை ஒரு மணமகன் நிச்சயம் செய்யும் போது வெள்ளிக்காசை அவளுக்கு கொடுத்து விட்டு செல்வார்கள். இது நிச்சயிக்கப்பட்ட மணமகன் கொடுக்கிற முதல் அன்பளிப்பு. அந்த பத்து காசை வாங்கிய நிச்சயிக்கப்பட்ட அந்த மணப்பெண், திருமணம் முடியும் வரை அதை பத்திரமாகப் பாதுகாத்திருக்க வேண்டும். ஏனென்றால் அந்த மணநாள் அன்று மணமகன் கண்டிப்பாய் நிச்சயமாக கேட்பார். நான் கொடுத்த வெள்ளிக்காசு எங்கே என்பார். அதைப் பத்திரப்படுத்தி மீண்டும் அவருடைய கைகளிலே கொடுக்கும் பெண் பாக்கியவதி. ஒருவேளை காணாமற்போனால், தொலைந்து போனால் அந்த திருமணம் நின்றுவிடும். பல வீண்

பிரச்சனைகள் ஏற்பட்டு விடும். வெள்ளிக் காசைப் பத்திரப்படுத்தவும், பாதுகாக்கவும் அந்த காலங்கள் நியமிக்கப்பட்டிருக்கும், எப்பொழுது மணமகன் வந்தாலும், எப்பொழுது திருமணம் நடந்தாலும் தன் கையில் அதை பத்திரமாக வைத்திருக்க வேண்டும். அதைப் போலத்தான் நம்முடைய எஜமான், நம்முடைய மணவாளன், நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம்மை இரட்சித்து, மீட்டெடுத்து காணாமற் போன ஆடுகளாகிய நம்மை மீட்டெடுத்து மந்தையில் சேர்த்து விலையெறப்பெற்ற வெள்ளிக்காசுக்கு ஒப்பாக வைத்திருக்கிறார். நாம் அவருடைய கையில் பத்திரப்படுத்தப்பட்ட, பாதுகாக்கப்பட்ட வெள்ளிக்காசாக இருக்க வேண்டும்.

அடுத்து வெள்ளிக்காசு என்பது என்ன? கர்த்தருடைய வார்த்தை **சங் 12:6-ல் கர்த்தருடைய சொற்கள் மண் குகையில் ஏழு தரம் உருக்கிப் புடமிடப்பட்ட வெள்ளிக்கொப்பான சுத்தச் சொற்களாயிருக்கிறது.** கர்த்தருடைய வார்த்தை சுத்த வெள்ளி, சுத்த தங்கம். அந்த வார்த்தையை நம்முடைய உள்ளத்தில், இருதயத்தில் பத்திரமாய் பாதுகாக்க வேண்டும். அதைத்தான் வேதம் சொல்லுகிறது **லூக் 8:15-ல் நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்டு, அதை உண்மையும், நன்மையுமான இருதயத்திலே காத்துப் பொறுமையுடனே பலன் கொடுக்கிறவர்களா யிருக்கிறார்கள்** என்று சொல்லப்பட்டுள்ளது. அந்த தேவனுடைய வார்த்தை தான் நம்மைப் புடமிடும், நம்மை சுத்திகரிக்கும். **சங் 119:72-ல் அநேகமாயிரம் பொன், வெள்ளியைப் பார்க்கிலும், நீர் விளம்பின வேதமே எனக்கு நலம்** என்று சொல்லப்பட்டுள்ளது. கர்த்தருடைய வார்த்தை வெள்ளியையும், பொன்னையும் விட மேலானது. அது நம்மைச் சுத்தப்படுத்துகிறது, கண்டித்து உணர்த்துகிறது, மிகுந்த கனிகளைக் கொடுக்கும்படி கொத்தி எருப்போட்டு, நமக்குத் தேவனுடைய வார்த்தையைத் தண்ணீராகப் பாய்ச்சுகிறது. அந்த கர்த்தருடைய வார்த்தை தான் நம்மை பொன்னாக, வெள்ளியாக மாற்றுகிறது. அந்த தேவனுடைய வார்த்தையில் எவ்வளவோ ஆசீர்வாதங்களும், கிருபைகளும் உண்டு. அதை நாம் அனுதினம் தேடி வாசிக்க வேண்டும், தியானிக்க வேண்டும்.

ஒரு போதகர் வருஷா வருஷம் கன்வென்ஷன் கூட்டம் நடத்துவார். கூட்டம் முடிந்தவுடனே வருகின்ற அவ்வளவு பேருக்கும் உணவு கொடுக்கப்படும். அதற்கு வேண்டிய அசிரி, பருப்பு, ஆடுகள் யாராவது கொண்டு வந்து கொடுத்து விடுவார்கள். கன்வென்ஷன் சிறப்பாக நடந்து முடிந்துவிடும். ஒருமுறை ஒருவர் அவரிடம் 75,000 ரூபாய் கொடுத்து அடுத்த கன்வென்ஷனுக்கு இந்த பணத்தை வைத்துக் கொள்ளுங்கள் என்று கொடுத்து விட்டு சென்றுவிட்டார். அந்த கன்வென்ஷன் நாட்கள் வந்தது. இவரிடத்தில் 75,000 ரூபாய் இருந்தபடியால் எப்படியும் எல்லாம் வந்து விடும் என்று மேலோட்டமாக இருந்து விட்டார். ஊக்கமாக ஜெபிக்கவில்லை எப்படியோ கஷ்டப்பட்டு கூட்டத்தை நடத்தி முடித்துவிட்டார்.

எல்லாம் முடிந்த பிறகு அடுத்த நாள் ஆண்டவருடைய பாதத்தில் அமர்ந்து துதித்து, ஜெபித்து நீர் என்னை குறைவில்லாமல் நடத்தினீரே உமக்கு நன்றி என்றார். அப்பொழுது ஒரு தரிசனம் அவருக்கு உண்டானது. ஒரு மலைப்பாம்பு ஆட்டுக்குட்டி ஒன்றை விழுங்கிக் கிடந்தது. அவருக்கு இது ஏன் எனக்குத் தெரிகிறது என்று நினைத்துக் கொண்டே இருக்கும் பொழுது, மெதுவாக ஒரு சத்தம் உண்டானது. உனக்கு, உங்கள் கன்வென்ஷன் கூட்டத்திற்கு வரவேண்டிய ஆட்டை அந்த பாம்பு விழுங்கிக் கொண்டது. காரணம் நீ ஊக்கமாய் ஜெபிக்கவில்லை என்று மென்மையான குரல் உண்டானது. அப்பொழுது அந்த போதகர் தான் கையில் இருந்த 75,000 ரூபாய் வந்தவுடன் திருப்தியாகி ஊக்கமாய் ஜெபிக்காதபடியால் வந்த ஆசீர்வாதத்தை சாத்தான் தடுத்து, மலைப் பாம்பு விழுங்கி விட்டது என்று உணர்ந்தார். அதன் பிறகு ஊக்கத்தோடு, கண்ணீரோடு ஜெபித்தார், பிறகு மகிமையாய், கிருபையாய் சபையை நடத்தி வந்தார். இன்றைக்கு அதைப் போலத்தான் சாத்தான் நமக்கு வர வேண்டிய நன்மைகளை, ஆசீர்வாதங்களைத் தடுத்து, தாமதப்படுத்தி அல்லது விழுங்கி நாம் அனுபவிக்க முடியாமல் செய்கிறான், வைத்திருக்கிறான்.

இப்படியாகத்தான் பேதுருவுக்கு வர வேண்டிய ஆசீர்வாதத்தை, வெள்ளிப்பணத்தை அவன் விழுங்கி வைத்திருந்தான், தடுத்து வைத்திருந்தான். ஆகவேதான் ஆண்டவராகிய தேவன் வரிப்பணம் செலுத்த காசு இல்லாத போது **மத் 17:27-ல் நீ, கடலுக்குப் போய் தூண்டில் போட்டு, முதலாவது அகப்படுகிற மீனைப் பிடித்து, அதின் வாயைத் திறந்துபார், ஒரு வெள்ளிப் பணத்தைக் காண்பாய், அதை எடுத்து எனக்காகவும், உனக்காகவும் அவர்களிடத்தில் கொடு என்றார்.** ஆம் இப்படி நமக்கு வரவேண்டிய ஆசீர்வாதங்கள், நன்மைகள், வெள்ளிக்காசை யாரோ எடுத்துக் கொண்டார்கள். அல்லது நாம் அதை தொலைத்து, காணாமற் போகப்பண்ணி,

நிர்விசாரமாய் எனக்கென்ன என்று இருந்து விட்டோம். ஒன்பது வெள்ளிக் காசு இருக்கிறது என்று திருப்தியடையாமல், அந்த காணாமற்போன வெள்ளிக்காசை, காணாமற் போன சாந்தகுணத்தை, காணாமற்போன பரிசுத்தத்தை, காணாமற்போன கனிகளைக் கண்டுபிடிக்க வேண்டும். அழுகையோடும், விண்ணப்பங்களோடும் அவர் சமூகத்தில் நம்மைத் தாழ்த்த வேண்டும். அப்பொழுது தேவன் நாம் இழந்ததைப் பெற்றுக் கொள்ளவும், கண்டுகொள்ளவும் நமக்கு கிருபை செய்வார். தேவன் நம்மிடத்தில் கொடுத்த அந்த வெள்ளிக்காசை, நமது மணநாள் வரும் வரை பத்திரமாய் பாதுகாத்து மீண்டும் நாம் அவரிடமே கொடுத்து பாராட்டுப் பெற, பத்திரப்படுத்துங்கள். ஆண்டவராகிய தேவன், நீங்கள் எதையும் இழக்காமல் இருக்க உங்களைப் பாதுகாப்பாராக.

## விளக்கைக் கொழுத்துங்கள்

**அன்றியும், ஒரு ஸ்திரி பத்து வெள்ளிக்காசை உடையவளாயிருந்து, அதில் ஒரு வெள்ளிக்காசு காணாமற்போனால், விளக்கைக் கொளுத்தி, வீட்டைப்பெருக்கி அதை கண்டுபிடிக்கும் வரைக்கும் ஜாக்கிரதையாய்த் தேடாமலிருப்பாளோ? லூக் 15:8.** காணாமற் போனதைத் தேட ஆண்டவர் கற்றுக் கொடுத்த வழி என்ன தெரியுமா? விளக்கைக் கொளுத்த வேண்டும். நம்முடைய ஆத்துமா விளக்கு, கர்த்தர் தந்த தீபம். **நீதி 20:27-ல் மனுஷருடைய ஆவி கர்த்தர் தந்த தீபமாயிருக்கிறது. அது உள்ளத்தில் உள்ளவைகளையெல்லாம் ஆராய்ந்து பார்க்கும்** என்று சொல்லப்பட்டுள்ளது. அந்த விளக்கு இன்றைக்கு எரியாமல் இருளடைந்துள்ளது, நம்முடைய ஆத்துமா, மனம், இருதயம் எங்கே? எப்படிக் கிடக்கிறது என்று தெரியாமல் இருளடைந்துள்ளது. குப்பையும், கூளமுமாக அல்லது தூஷியாக எங்கே கிடக்கிறது என்று தெரியாமல் பாழடைந்து கிடக்கிறது. அந்த கீழே விழுந்த வெள்ளிக் காசைக் கண்டுபிடிக்க, மீட்க, புதைந்து கொண்டிருக்கிற, அனையும் தருவாயில் இருக்கின்ற இந்த விளக்கை சரி செய்ய வேண்டும், பற்றி எரிய வைக்க வேண்டும்.

அதைத்தான் அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறார் **1 தெச 5:19-ல் தேவ ஆவியை அவித்துப் போடாதிருங்கள்,** அனைத்துவிட வேண்டாம் என்று சொல்லப்பட்டுள்ளது. நம் விளக்கு எரிந்தால் தான் நம்மிடத்தில் உள்ள விலையெறப்பெற்ற பொருட்கள் பத்திரமாக இருக்கும், பாதுகாப்பாய் இருக்கும். அதுமட்டுமல்ல காணாமற்போனாலும் கண்டுபிடிக்க முடியும். ஆகவே கொளுந்து விட்டு எரியத்தான், பிரகாசிக்கத்தான் ஆண்டவராகிய இயேசு பூமிக்கு இறங்கி வந்தார். பூமியில் அக்கினியைப் போட வந்தேன், தீயை மூட்ட வந்தேன், அது இப்பொழுதே பற்றி எரிய வேண்டும் என்றார். எரிகிற விளக்காய் இருந்தால், விளக்கைக் கொளுத்தினால் கண்டிப்பாய் தொலைந்துபோன, காணாமற்போன வெள்ளிக்காசைக் கண்டுபிடித்து விடலாம். வீட்டைப் பெருக்கி சுத்தம் செய்து குப்பைகளை, தூசிகளை அப்புறப்படுத்தி விடலாம். அதற்குத்தான் விளக்கைக் கொளுத்துங்கள் என்றார்.

சங்கீதத்தில் **சங் 119:105-ல் உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது** என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆம் தேவனுடைய வார்த்தை, வசனம் நம்முடைய கால்களுக்கு தீபமும், பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது. அந்த வசனம் நம்முடைய இருதயத்தில், ஆத்துமாவில் விழும்போது அது பலனளிக்கும். நமக்குள் இருக்கும் பரிசுத்த ஆவியானவரைப் பற்றி எரியவும், பிரகாசிக்கவும் வைக்கிறது. அப்பொழுது நாம் வீட்டைச் சுத்தம் பண்ணுகிறபோது காணாமற்போன வெள்ளிக்காசை தேடவும், கண்டுபிடிக்கவும் மீண்டும் பெற்றுக் கொள்ளவும் அதின்நிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாகவும், தேவனுக்கு மகிமையையும் உண்டாக்குகிறது. இதினிமித்தம் நாம் மட்டுமல்ல நம்மை சுற்றியிருக்கிறவர்களும் நமக்குள் உண்டாகுகிற மாற்றத்தைப் பார்த்து சந்தோஷமடைந்து தேவனை மகிமைப் படுத்துகின்றனர்.

சமீபத்தில் கிட்னி பழுதடைந்து டயாலிஸிஸ் பண்ணிய சகோதரன் ஆண்டவரை நோக்கி ஜெபிக்க ஜெபிக்க வாரத்தில் மூன்று நாளாக இருந்தது, பிறகு ஒரு நாளாக மாறியது. தற்போது எந்த டயாலிஸிஸ் செய்யாதபடி எல்லாம் நார்மலாக, கிட்னி நல்ல செயல்பட ஆரம்பித்துவிட்டது. என்னோடு அவர் பேசும்போது அவருடைய சந்தோஷத்திற்கு அளவேயில்லை, கர்த்தரை மகிமைப்படுத்திக் கொண்டே இருந்தார். இனி அவருக்காக வாழுவேன், உழைப்பேன், ஊழியம் செய்வேன் என்றார். அதைப் போலத்தான் மனம் திரும்புகிற ஒரு பாவியின் நிமித்தம், காணாமற்போனதைக் கண்டுபிடிக்கிற ஒரு மனிதனின் நிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாகும். என் ஆண்டவராகிய தேவன் தாமே அவர் சமூகத்தில் நீங்கள் வாழ்கின்றவர்களாகவும், பிழைத்திருக்கிறவர்களாகவும் கண்டுபிடிக்கப் பட்டவர்களாகவும் வாழக் கிருபை செய்வாராக.

# சர்வ வல்லவருடைய சுவாசம் எனக்கு உயிர் தந்தது

சகோதரி.
கலா வின்சென்ட்ராஜ்



ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் சகோதரிகளுக்கு அன்பின் வாழ்த்துக்கள். கடந்த சில வருஷத்திலிருந்து இந்த சுவாசத்திற்காக நாம் எவ்வளவு போராட்டங்களை சந்தித்துக் கொண்டிருக் கிறோம். எத்தனையோ அருமையானவர்களை இழக்கக் கொடுத்திருக்கிறோம். **யோபு 33:4-ல் தேவனுடைய ஆவியானவர் என்னை உண்டாக்கினார், சர்வ வல்லவருடைய சுவாசம் எனக்கு உயிர் கொடுத்தது** என்று யோபுவின் நண்பர் எலிகூ சொல்வதை நாம் வாசிக்கிறோம்.

உண்மையில் **ஆதி 2:7-ல் தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார்,** மனுஷன் ஜீவாத்துமாவானான் என்றும் மனிதன் சிருஷ்டிக்கப்பட்டதும், உயிர்பெற்றதும் எப்படி என்பதை நாம் அறியலாம். சர்வ வல்லவருடைய சுவாசம் தான் அவனுக்கு உயிர் கொடுத்தது. அதற்கு முன்பு அவனுக்குள் உயிர் இல்லை. தம்முடைய ஜீவசுவாசத்தை நாசியிலே ஊதின பிறகு அவன் உயிர் உள்ளவன் ஆனான். சாப்பிடக்கூடாது என்று ஆண்டவார் தடுத்த கனியை சாப்பிட்டதினாலே, அவனது கீழ்ப்படியா மையினாலே அவன் ஆத்துமாவில் மரித்துப் போனான். **தேவ கட்டளைக்கு கீழ்ப்படியாமல் இருப்பதுதான் பாவம் என்று 1 யோவான் 3:4 சொல்லுகிறது.** பாவம் ஒருவரை செத்தவர் களாக்கி விடுகிறது. அவர்கள் உயிருடன் இருந்தாலும் ஆத்துமாவில் மரித்தவர்களாய் நடை பிணமாய் அதாவது நடப்பார்கள் ஆனால் செத்தவர்களாய் நடப்பார்கள். **வெளி 3:1-ல் சர்தை சபையின் தூதனுக்கு ஆவியானவர் எழுதும் போது நீ உயிருள்ளவனென்று பெயர் கொண்டிருந்தும் செத்தவனாயிருக்கிறாய்.** ஒருவருக்குள் இரண்டு காரியம் இருக்கிறது. சரீரம் நடக்கிறது, பேசுகிறது, அசைகிறது, சாப்பிடுகிறது. ஆனால் ஆத்துமாவிலே ஜீவன் இல்லை.

இந்த ஆத்துமா அக்கிரமத்தினாலும், பாவத்தினாலும் மரித்துக் கிடக்கிறது. இந்த ஆத்துமாவிற்குள் ஜீவன் வரவேண்டும். **யோவான் 10:10-ல் நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்** என்று இயேசு சொன்னார். நமக்குள் ஜீவன் உண்டாயிருக்க வந்த இயேசுவிடம் நாம் வந்தால், இயேசு நமக்குள் தமது ஆவியால் நம்மை உணர்த்தி மரணத்துக்கு ஏதுவான காரியங்களை அப்புறப்படுத்தி, சுத்திகரிப்பார். அப்படி மரணத்துக் குட்பட்டிருந்த நம்மை, நம் ஆத்துமாவைப் பார்த்து “ஜீவன் பெற்றுக் கொள்”, “பிழைத்திரு” என்பார். இயேசு மரித்த பிறகு இனி என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்து பயத்தோடும், துக்கத்தோடும், அவமானத்தோடும் கதவுகளைப் பூட்டி வைத்துக் கொண்டு வீட்டுக்குள்ளேயே அழுது கொண்டே சீஷர்கள் இருந்தார்கள். பூட்டிய வீட்டிற்குள் இயேசு

பிரவேசித்து அவர்களை திடப்படுத்தி **யோவான் 20:22-ல் அவர்கள் மேல் ஊதி பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்றார்.** அப்பொழுது அவர்கள் திடனடைந்தார்கள். நாற்பது நாளளவும் அவர்களோடு பேசி, தன்னை வெளிப்படுத்தி தாம் உயிரோடிருக்கிறதை அறிய செய்து, மேல் வீட்டறையில் காத்திருக்கவும், பரிசுத்த அக்கினியால் பெலப்படவும் தேவன் கிருபை செய்தார். அப்பொழுது அவர்கள் ஜீவன் பெற்று தேவனுக்காக வாழ்ந்து, ஊழியம் செய்தார்கள். அதுமட்டுமல்ல நாம் ஜீவனுக்குள் பிரவேசிக்க வேண்டும் என்று இயேசு இன்னுமொரு ஜீவனைப்பற்றி பேசுகிறார்.

ஒன்று சரீரப்பிரகாரமான ஜீவன், அடுத்து ஆத்துமாவில் வரவேண்டிய ஜீவன். மத் 7:13,14-ல் இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள். கேட்டுக்குப் போகிறவாசல் விரிவும் வழி விசாலமுமாயிருக்கிறது. அதன் வழியாய் பிரவேசிக்கிறவர்கள் அநேகர், ஜீவனுக்குப் போகிறவாசல் இடுக்கமும் வழி நெருக்கமுமாயிருக்கிறது. அதைக்கண்டு பிடிக்கிறவர்கள் சிலர். ஜீவனுக்கு போகிறவாசல் என்று நாம் வாழ்வதற்கு ஜீவன் எவ்வளவு அவசியமோ? அதே போல நாம் வாழும் நாட்களில் ஜீவனுக்கேதுவாய் நடந்து, வாழ்ந்து வந்தால் இந்த நித்திய ஜீவனுக்குள் பிரவேசிப்போம், மோட்சத்திற்குள், பரலோகத்திற்குள், ஜீவனில் பிரவோசிப்போம்.

மத் 18::8,9-ல், மாற் 9:43,45-ல் உனக்கு இடறல் உண்டாக்குகிற உடல் உறுப்புக்களை தரித்துவிடு. இரண்டு கையோ, கண்ணோ, காலோ உடையவனாய் நரக அக்கினியில், எரிநரகத்தில், அவியாத அக்கினியில் தள்ளப்படுவதைப் பார்க்கிலும் ஊனமுற்றவனாய் ஜீவனுக்குள் பிரவேசிப்பது நலம் என்று ஆண்டவர் இங்கு ஒரு ஜீவனுக்குப் போகிற வாசலையும், மரணத்துக்குப் போகிற வாசலையும் விவரித்து சொல்லுகிறார். பரலோகம், நரகம் பற்றி பேசுகிறார். இரட்சிக்கப்படாத ஒரு வாழ்க்கை, இரட்சிக்கப்பட்ட வாழ்க்கை. நாம் எப்படி வாழ்ந்து இந்த ஜீவனுக்குள் பிரவேசிக்கப் போகிறோம் என்பது ஒரு வாழ்க்கை. இதிலும் சர்வ வல்லவர் தமது சுவாசத்தை நமக்கு கொடுத்து நம்மை உயிருள்ளவர்களாய் ஜீவனுக்குள் பிரவேசிக்கப்பண்ண வேண்டும், அதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்?. சிலர் என்ன செய்தார்கள் என்று பார்ப்போம்.

## மரித்தவனுக்குள் ஜீவன்

பக்தனாகிய தாவீதுக்கு ஏராளமான பாடுகள். சங் 31:9-12 வரை வாசித்தால் எனக்கு இரங்கும் கர்த்தாவே! நான் நெருக்கப்படுகிறேன், துக்கத்தினால் என் கண்ணும், என் ஆத்துமாவும், என் வயிறுங்கூட கறுகிப் போயிற்று. என் பிராணன் சஞ்சலத்தினாலும், என் வருஷங்கள் தவிப்பினாலும் கழிந்து போயிற்று. என் அக்கிரமத்தினாலே என் பெலன் குறைந்து, என் எலும்புகள் உலர்ந்து போயிற்று. என் சத்துருக்களாகிய யாவர் நிமித்தமும், நான் என் அயலாருக்கு நிந்தையும், எனக்கு அறிமுகமானவர்களுக்கு அருக்களிப்புமானேன் என்று சொல்லி விட்டு 12ஆம் வசனத்தில் செத்தவனைப் போல் எல்லாராலும் முழுவதும் மறக்கப் பட்டேன், உடைந்த பாத்திரத்தைப் போலானேன், அநேகர் சொல்லும் அவதூறைக் கேட்டேன். எனக்கு விரோதமாய் அவர்கள் ஏகமாய் ஆலோசனைப் பண்ணுகிறதினால் திகில் என்னைச் சூழ்ந்து கொண்டது, என் பிராணனை வாங்கத் தேடுகிறார்கள் என்கிறான்.

எப்படிப்பட்ட நெருக்கத்திலும், துக்கத்திலும், கவலையிலும் பிராணனை வாங்குகிற அளவு எதிர்ப்பிலும் செத்தவனைப் போல எல்லாராலும் மறக்கப்பட்டு உடைந்த பாத்திரம் போல ஆன, அவனது வாழ்வில் 22-ம் வசனத்தில் உம்முடைய கண்களுக்கு முன்பாக இராதபடிக்கு வெட்டுண்டேன் என்று நான் என் மனக்கலக்கத்தில் சொன்னேன். ஆனாலும் நான் உம்மை நோக்கிக் கூப்பிட்டபோது என் விண்ணப்பங்களின் சத்தத்தை கேட்டீர் என்கிறான். மறக்கப்பட்டு, வெட்டுண்டு போனேன் என்று கவலையாலும், துக்கத்தாலும், மனக் கலக்கத்தாலும் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்ட தாவீதின் குரலை கேட்டு, விண்ணப்பத்தைக் கேட்டு அதில் அவன் மடிந்து விடாதபடி அவனை காப்பாற்றினவர் உங்களுக்கும் ஏதோ ஒரு நன்மை நடக்காததினால் பாதிக்கப்பட்டு அல்லது எதிர்பாராத தீமையில் மனங்கலங்கி நிற்கிற

உங்களையும் அவர் காப்பாற்றி அற்புதம் செய்வார்.

மாற் 9:17-ல் ஒரு தகப்பன் இயேசுவை நோக்கி போதகரே, ஊமையான ஒரு ஆவி பிடித்த என் மகனை உம்மிடத்தில் கொண்டு வந்தேன். அது அவனை எங்கே பிடித்தாலும் அங்கே அவனை அலைக்கழிக்கிறது. அப்பொழுது அவன் நுரைதள்ளி பல்லைக் கடித்து சோர்ந்து போகிறான் என்று மகன் படுகிற துன்பத்தை, அவஸ்தையை இயேசுவிடம் சொல்கிறான். இயேசு அந்த பிசாசை அதட்டினபோது 26,27-ஆம் வசனத்தில் அப்பொழுது அது சத்தமிட்டு அவனை மிகவும் அலைக்கழித்துப் புறப்பட்டு போயிற்று. அவன் செத்துப் போனான் என்று அநகர் சொல்லத்தக்கதாகச் செத்தவன் போல் கிடந்தான். இயேசு அவன் கையைப் பிடித்து அவனைத் தூக்கினார், உடனே அவன் எழுந்திருந்தான். இதைப் போல பிசாசின் தாக்குதலில் பாதிக்கப்பட்டு வியாதியோ, பெலவீனமோ, துக்கங்கள், கவலைகள் எதில் மடிந்து கொண்டிருந்தாலும் இயேசுவே! என்னை காப்பாற்றும் என்று அவரிடம் வந்தால் மடிந்து கொண்டிருக்கிற உங்களை, செத்தவனைப் போல் ஆகிவிட்டேன் என் நம்பிக்கை எல்லாம் அற்றுப் போயிற்று, எப்படி உயிர் வாழ்வேன் என்று கதறுகிற உங்கள் ஜெபத்தை கேட்டு உங்களுக்குள் ஒரு ஜீவனை அனுப்புவார்.

## வேதவாக்கியத்தால் ஜீவன்

அவரை நோக்கி விண்ணப்பம் பண்ணும் போது நம் உயிர் பிழைத்துக் கொள்கிறது. யோவா 5:39-ல் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள் அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக் குறித்து சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே. வேத வசனத்தால் நமக்குள் ஜீவன் வருகிறது. லாசரு மரித்துப் போனான். கல்லறையில் வைத்து நான்கு நாளாயிற்று, ஆனால் **கல்லறையின் முன்பாக நின்று இயேசு, லாசருவே வெளியே வா என்று உரத்த சத்தமாய் கூப்பிட்டார். அப்பொழுது மரித்தவன் வெளியே வந்தான். யோவா 11:43,44-ல் மரித்தவனை வெளியே கொண்டு வந்தது வார்த்தை. யோவா 5:25-ல் மரித்தோர் தேவகுமாரனுடைய சத்தத்தை கேட்கும் காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது. அதைக் கேட்கிறவர்கள் பிழைப்பார்கள் என்று இயேசு சொன்னார்.**

அதே போல நாயீன் பட்டணத்தில் ஒரு விதவையின் மகன் அடக்கம் பண்ண கொண்டுபோகும் போது இயேசு எதிரே வந்தார். அவள்மேல் மனதுருகி கிட்டவந்து பாடையைத் தொட்டார். வாலிபனே எழுந்திரு என்று உனக்கு சொல்லுகிறேன் என்றார். மரித்தவன் எழுந்து, உட்கார்ந்து பேச தொடங்கினான். அவனை அவன் தாயினிடத்தில் ஒப்புவித்தார். லூக் 7:11-15 வரை வாசிக்கிறோம். மரித்தவன் வெளியே வரவும், எழுந்து உட்கார்ந்து பேசத் தொடங்கவும் தேவனுடைய வார்த்தையில் இருக்கிற ஜீவனை தேடுகிறதினாலேயே முடியும். அதனால் தான் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள் அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டு என்கிறார். **சங் 143:3-ல் சத்துரு என் ஆத்துமாவைத் தொடர்ந்து, என் பிராணனைத் தரையோடே நசுக்கி வெகுகாலத்துக்கு முன் மரித்தவர்கள் போல் என்னை இருளில் இருக்கப் பண்ணுகிறான்** என்று சங்கீதக்காரன் சொல்வது போல அடிக்கடி சத்துரு நம்மை மரித்தவர்கள் போல இருக்கப் போராடிக் கொண்டிருக்கும் போது, இந்த ஜீவனுள்ள வேத வார்த்தைகளை நாம் படிக்கும் போது அந்த வார்த்தையில் இருக்கிற ஜீவன் நம்மை மனச் சோர்விலிருந்து, மரித்த நிலையிலிருந்து வெளியே கொண்டுவந்து விடும். மற்றவர்கள் கண்ணீர் வடிக்கும் அளவு, பாடையில் சுமந்து கொண்டு போகிற அளவு மரித்துக் கிடந்தாலும் ஜீவனுள்ள வார்த்தை ஜீவனைத் தந்து விடும்.

நாம் வேதத்தை வாசிக்க, வாசிக்க இயேசுவை அதிகமாய் அறிய முடியும். **யோவா 17:3-ல் ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்** என்று இயேசுவின் ஜெபத்தில் வாசிக்கிறோம். இயேசுவை எப்படி அறியலாம் வேதவசனத்தை வாசிக்கும் போது இயேசுவை, மெய் தேவனை அறிந்து ஜீவனை உடையவர்களாகிறோம். இதுவரை மரித்த நிலையில் இருக்கிற நாம் ஜீவன் பெற்றுக் கொள்கிறோம். அதுமட்டுமல்ல **மத் 19:16,17-ல் அப்பொழுது ஒருவன் வந்து இயேசுவை நோக்கி நல்ல போதகரே, நித்திய**

**ஜீவனை அடையும்படி நான் எந்த நன்மையைச் செய்ய வேண்டும் என்று கேட்டான். அதற்கு அவர், நீ ஜீவனுக்குள் பிரவேசிக்க விரும்பினால் கற்பனைகளை கைக்கொள் என்றார்.**

நாம் ஜீவனுக்குள் பிரவேசிக்க வேதத்தை வாசித்தால் மட்டும் போதாது, ஆராய்ந்து பார்த்தால் மட்டும் போதாது, ஜீவனில் பிரவேசிக்க, பலோகத்திற்கு வர ஆண்டவர் சொன்ன வார்த்தைகளை கைக் கொள்ளணும். அதற்காக நாம் முடிந்த மட்டும் வசனம் கற்பிக்கிற வழியில் நடக்க பிரயாசப்படணும், நடக்க தவறினால் மன்னிப்பு கேட்டு மனந்திரும்பணும் அப்போதுதான் நாம் ஜீவனில், பரலோகத்தில் பிரவேசிக்க முடியும். நம் பெலத்தால் இது முடியாது **பரிசுத்த ஆவியானவர் நம் பெலீனத்தில் நமக்கு உதவி செய்கிறார் என்று ரோமர் 8:25-ல் வாசிக்கிறோம்.** நம்மால் எதெல்லாம் முடிய வில்லையோ, எதில் பலவீனமடைந்திருக் கிறோமோ என்னைப் பலப்படுத்தும் ஆவியானவரே என்று ஜெபம் செய்து பெலத்தைப் பெற்று வாழ முடியும் சர்வ வல்லவருடைய சுவாசம் நமக்கு உயிர் கொடுக்கும்.

## விசுவாசத்தால் ஜீவன்

வேதவார்த்தையால் நமக்கு உயிர்மீட்சி உண்டாகிறது. யோவா 6:47-ல் என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டென்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று இயேசு சொன்னார். யோவா 5:24-லும் என் வார்த்தையைக் கேட்டு என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு. அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல் மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்றார். நாம் ஆண்டவரை நோக்கி ஜெபித்து, வேத வாக்கியங்களினால் அவரை அறிந்து கொள்வதோடு அவரை விசுவாசிக்க வேண்டும். இந்த விசுவாசம் பல சமயங்களில் நமக்கு காணாமல் போகிறது.

ஒரு பெண் வெள்ளி காசை தொலைத்தது போல நாமும் விசுவாசத்தை தொலைத்து விட்டு ஜீவனற்றவர்களாக பயத்தோடும், நடுக்கத்தோடும் என்ன நடக்கப் போகிறது, எப்படி நடக்கும் என்று கலங்குகிறோம். சகலமும் அவரது கட்டுப்பாட்டில் இருக்கிறது. அவர் சொல்ல ஆகும், கட்டளையிட நிற்கும். ஒருமுறை தாவீது வாழ்க்கையில் கோலியாத் வந்து நின்றபோது என் ஆடுகளை பிடிக்க சிங்கமும், கரடியும் வந்தது. ஒரு ஆட்டுக் குட்டியைப் போல அதை கிழித்துப்போட்டேன். அதைப் போலவே இந்த பெலிஸ்தனும் இருபபான் என்று கடுமையான பிரச்சனை நடுவில் விசுவாசித்த தாவீது ஜெயத்தைப் பெற்றான். தப்பிப் பிழைப்போம் என்ற நம்பிக்கை அற்றுப்போகத்தக்கதாக, மரணம் வரும் என்று நிச்சயத்திருந்த நேரத்தில் தேவன் மேல் விசுவாசம் வைத்த பவுலை ஆண்டவர் மரணத்திலிருந்து தப்புவித்தார். சிங்கங்கள் தன்னை சேதப்படுத்தாதபடி தானியேல் தேவன் மேல் வைத்த விசுவாசத்தால் தப்புவிக்கப்பட்டார்.

தன் விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான். ஆபகூக் 2:4. இந்த விசுவாசத்தால் ஒரு ஜீவன் நமக்குள் பாய்கிறது. அப் 3:16-ல் பிறவியிலேயே முடவனாக பிறந்த ஒருவன் பேதுருவும், யோவானும் தேவாலயத்திற்குப் போகையில் அவன் கையைப் பிடித்துத் தூக்கி விடும் போது அவன் எழுந்து தேவாலயத்திற்குள் பிரவேசித்து விட்டான். பேதுரு இதைப் பற்றி அறிவிக்கும் போது அவருடைய நாமத்தைப் பற்றும் விசுவாசத்தினால், அவருடைய நாமமே இவனை பலப்படுத்தியது. அவரால் உண்டாகிய விசுவாசமே இவனுக்கு சுகத்தை கொடுத்தது என்றார். அவரால் உண்டாகிய ஒரு விசுவாசம் நமக்குள் பாய்கிறது. எந்த எதிர்மறையான காரியத்திலும் அவரால் நாம் தேற்றப்படுகிறோம். அவரால் நமக்கு அருளப்படுகிற விசுவாசம் நமக்கு அற்புதத்தை கொண்டு வருகிறது. அந்த விசுவாசத்தால் மரித்த நிலையில் உள்ள லாசருக்கள் வெளியே வருவார்கள். நடக்கவே முடியாது என்று எண்ணிவிட்ட காரியம் நடக்கும். அவரது சுவாசத்தால் நமக்கு விசுவாசம் உண்டாகிறது. அந்த விசுவாசத்தால் ஆக்கினைக்கு நீங்கி ஜீவனுக்குள் வருகிறோம். என் ஆண்டவர் இதை வாசிக்கிற ஒவ்வொருவர் மேல் தமது சுவாசத்தை ஊதி, ஜீவன் பெற்றுக் கொள் என்று சொல்லி உயிர் கொடுத்து வாழ வைப்பாராக.

வாலிபர் பகுதி

# மாஸ்டர் பிளானா? - மாஸ்டர்ஸ் பிளானா?

*சகோதரி. பிரேமா டேவிட்*



**அவருடைய சித்தத்தின்படியெல்லாம் செய்வார், எனக்குக் குறித்திருக்கிறதை அவர் நிறைவேற்றுவார். யோபு 23 : 13 ,14**

**He performs what is planned for me Job 23:14**

கிறிஸ்துவில் அன்பான வாலிபத்தம்பி, தங்கைகளே, நம் வாழ்க்கையில் நிறைவேற்றுவதற்காக, நமக்கான தம் திட்டத்தை, தம் உள்ளங்கையில் வரைந்து, எழுதி வைத்திருப்பவரான நாம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

இளம் வயதில் இருதய வியாதியினால் மரித்துக் கொண்டிருந்த, மருத்துவர்களால் கைவிடப்பட்ட சகோதரர் மோகன் சி லாசரஸ். அவர்களை ஆண்டவர், படுக்கையருகே சென்று தொட்டு சுகமாக்கினார். இன்று வரை அவருடைய இருதயம் புது இருதயம் போல இயங்கும்படி செய்து, தேவன் அவரை வாழ வைத்திருக்கிறார். தன்னைக் காப்பாற்றின இயேசுவுக்காகத் தான், இனி வாழ்வேன் என்று இயேசுவை தன் சொந்த இரட்சகராக தெய்வமாக அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். இயேசுவின் பிள்ளையாக வாழ்ந்து வந்த அவர்களுக்கு 12-ஆம் வகுப்பு முடித்த பின்பு மருத்துவராக வேண்டும் என்று பெரிய மாஸ்டர் பிளான், விருப்பமிருந்தது. ஆனால் அவருடைய எஜமானாகிய இயேசுவுக்கோ அதைவிட ஒரு சிறப்பான மகா பெரிய பிளான் இருந்தது. தன்னைக் குறித்து தேவன் ஏற்கனவே தீர்மானித்து வைத்திருந்த தேவ சித்தத்திற்கும், திட்டத்திற்கும் தன்னை அவர் ஒப்புக்கொடுத்தார். இன்று மாஸ்டர்ஸ் பிளான் அவரில் நிறைவேறியது. இன்று அவர்கள் மூலமாக அநேகர் ஆண்டவருடைய தெய்வீக சுகத்தை, தங்கள் மனதிலும், சரீரத்திலும், குடும்பத்திலும் அனுவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மூலம் இயேசுவின் நாமம் மகிமையடைகிறது எத்தனை சந்தோஷம்.

## எனது மாஸ்டர் (பெரிய) பிளான்

**உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து. அவர் மேல் நம்பிக்கையாயிரு அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார். சங்கீதம் 37:5**

இந்த வருடம் லீவுல எங்கே போலாம், **Useful**-ஆ என்ன செய்யலாம் என்று சிலர் யோசித்துக் கொண்டிருப்பீர்கள். வேறு சிலர் **Already Plan** பண்ணி செய்யத் தொடங்கியிருப்பீர்கள். அதேபோல் ரிசல்ட் வரும் முன்னே, என்ன படிக்கணும், எங்கே படிக்கணும் சொல்லி நீங்கள், உங்கள் பெற்றோரும் **Pre-Planned**-ஆக இருப்பீர்கள். ரிசல்ட் வரட்டும் அப்புறம் பாத்துக்கலாம், எனக்கெல்லாம் எந்த **Idea**-வும் இல்ல, என்ன மார்க் வருமோ, நான் விரும்பும் கோர்ஸ் கிடைக்குமோ, கிடைக்காதோ **Fees** கட்ட முடியுமான்னு தெரியலையே என்ற பயத்தோடு கலக்கத்தோடு சிலர் இருப்பீர்கள். எனக்கு ஒரு நல்ல வேலை கிடைச்சவுடன் அம்மா, அப்பாவுக்கு இது வாங்கி கொடுக்கணும், முதல் வேலையா **R15-Bike** வாங்கணும் என்றெல்லாம் மனசுக்குள்ளே மாஸ்டர் பிளான் போட்டிருப்பீர்கள். எனக்கு வரப்போகிற பெண், மாப்பிள்ளை இப்படியிருக்கணும் என்று பல (நினைவு) கனவுகளோடும் இருப்பீர்கள். இன்னும் ஒரு சிலர் இந்த உலகம், **Technology** பற்றி எல்லாம் அம்மா அப்பாவுக்கு தெரியாது. எனக்கு எல்லாம் தெரியும், என் **life**, என் **Future**-ஐ நான் தான் **Decide** (தீர்மானம்) பண்ணனும். தன்நம்பிக்கை அதிகமுடைய வர்களாக ஒரு மெகா மாஸ்டர் பிளானோடு தான் இருக்கிறீர்கள். நீங்கள் எப்படி?

ஏன்? எங்களுக்கு என்ன ஒரு **Plan** இருக்கக் கூடாதா? ஆசை கனவுகள் தவறா? எங்கள் விருப்பத்தை கடவுள் கூட நிறைவேற்ற விடமாட்டாரா? என்று நீங்கள் நினைப்பீர்கள். மன விருப்பங்களை தந்தருளி, உங்களது திட்டங்களை எல்லாம் நிறைவேற்றுகிற நல்ல தகப்பனவர். முட்டை கேட்டால் முட்டையை கொடுக்கிற நல்ல தகப்பன்களை விட நல்லவர். உங்களது **Plan** எல்லாம் நிறைவேற்றி உங்களை சந்தோஷப்படுத்துவார். சங்கீதம் 20:4 மத்தேயு 7:7-11

உங்கள் மனதில் தோன்றும், நீண்ட நாளாய் செய்ய வேண்டும் என்ற உங்கள் மாஸ்டர் பிளான் எல்லாமே சரியானதாக, உங்கள் எதிர்கால வாழ்க்கைக்கு பயனுள்ளதாக, பாதுகாப்பாக இருக்குமா என்பது தான்

(கேள்விக்குறி) உங்களுக்கு தெரியாது .உங்களுக்கு தெரிந்தது எல்லாம் உங்களது கடந்த காலம், நிகழ் காலம் மட்டுமே. அதே மாதிரி இதைப் படிச்சா, இங்கே போனா நல்ல வேலை கிடைக்கும், நல்லா இருக்கும் என்று விசாரித்து பிளான் பண்ணுவீர்கள். மற்றவர்களுக்கு அது ஒரு வேலை சக்ஸஸ் ஆக இருந்திருக்கலாம். மனுஷருக்கு செம்மையாய் தோன்றுகிற வழி உண்டு அதன் முடிவு மரண வழிகள் (தீமைகள்). நீதிமொழிகள் 14:12

எனவே கடந்த காலம், நிகழ் காலம், எதிர் காலத்தை அறிந்த சர்வ ஞானியான ஆண்டவரிடத்தில் உங்களது பிளானை எல்லாம் தெரியப்படுத்தி, என் விருப்பத்தை உமக்கு தெரிவிக்கிறேன். நீங்க எனக்கு உதவி செய்யுங்க வழி காட்டுங்க இதை செய்ய விரும்புகிறேன், நினைக்கிறேன் என்று நீங்கள் உங்களை ஒப்புக் கொடுத்தாலே போதும் உங்களது உயர்வுக்கும், வெற்றிக்கும், முன்னேற்றத்திற்கும் ஆதாரமாக அவரது ஆலோசனையும், வழிநடத்துதலும் உங்களுக்கு கிடைக்கும்.

உங்களுக்கான **Track**-ல் திசை மாறாமல், தடுமாறாமல் சரியாய் சென்று ஆசீர்வாதமாய் இருப்பீர்கள். இப்பத்தான் முதல் தடவையாக அல்லது பலமுறை முயற்சி செய்து ஒரு முறை கூட வெற்றியை உங்கள் வாழ்விலே, தேர்வுகளிலே காணாதவராக, உள்ளம் உடைந்தவர்களாக நீங்கள் இருக்கிறீர்களா? திருமணமே வேண்டாம் என்ன இந்த வாழ்க்கை என்று சோர்ந்து போய் விட்டீர்களா? இந்த ஒரு முறை உங்களை படைத்த, உங்களுக்காக இரத்தம் சிந்தி, உங்களை விலைக்கு வாங்கின உங்கள் எஜமானிடம் ஒப்படைத்து பாருங்கள். **அவர் சகலத்தையும் செய்ய வல்லவர். அவர் செய்ய நினைத்தது ஒன்றும் தடைபடாது. யோபு 42:2**

## என் எஜமானன் இயேசுவின் பிளான் மாஸ்டர் பிளான்

**பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந் திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப் பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது. ஏசாயா 55:9**

பாவத்திலும், சாத்தானின் பிடியிலுமிருந்த மக்களை காப்பாற்றுவதற்கு பிதாவாகிய தேவன் இயேசுவை பூமிக்கு அனுப்புவதற்காக ஒரு **plan** பண்ணி, பல்லாயிரம் வருடங்களுக்கு பின்பு இயேசுவை பூமிக்கு அனுப்பினார். இயேசு சிலுவையை தன் மரணத்தின் மூலம், சாத்தானை முறியடிக்கப் போகிற கடைசி நேரத்திலே சொல்லுகிறார், பிதாவை விட்டு கொஞ்ச நேரம் பிரிந்திருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுமே என்பதற்காக இந்த பாத்திரம் (சிலுவை மரணம்) என்னை விட்டு நீங்கினால் நீங்கச் செய்யும், ஆகிலும் என் விருப்பமல்ல, உங்க விருப்பம், திட்டம் நடக்கட்டும் (மத்தேயு 26:39) என்று மாஸ்டர் பிளானுக்கு தன்னை ஒப்புக்கொடுத்தார், ஜெபித்தார். அவர் மரித்து மூன்றாம் நாளில் உயிரோடு எழும்புவதே அவருடைய பிளானாக இருந்ததால் அதுவே நிறைவேறியது. அதனால் பிதா அவரை எல்லா நாமத்திற்கும் மேலாய் உயர்த்தினார். அதனால் தான் நாம் எல்லாரும் ஆசீர்வதிக்கப் பட்டிருக்கிறோம்.

ஆபிரகாம் போல பஞ்சம் வந்தவுடன் ஈசாக்கும் எகிப்துக்குப் போய் ஏதாவது வம்புல மாட்டிடுவான் என்று அறிந்த தேவன் அவரை எகிப்துக்குப் போகாதே, இந்த ஊரிலே இரு நான் உன்னை ஆசீர்வதிப்பேன் என்றார். அப்படியே ஆண்டவருடைய பிளான்-படி வறட்சியான காலத்திலும் விவசாயம் செய்து 100 மடங்கு பலனை அடைந்து ஐசுவரியவானாகி, வர வர விருத்தியடைந்து மகா பெரியவனானான். அவர்கள் வெட்டின துரவை எதிரிகள் எத்தனை முறை தூர்த்துப்போட்டாலும், எல்லாம் வாய்க்க தொடங்கியது. எதிர்த்தவர்களே நீர் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவராமே என்று சொல்லத் துவங்கினர். ஈசாக்கின் சந்ததியில் தான் இயேசு பிறந்தார். தேவனின் திட்டம் இந்த பூமியில் நிறைவேறியது. ஈசாக்குக்கு எதிரான, எதிரி நினைத்தது ஒன்று கூட நடக்காதபடி தேவன் அவருடைய திட்டத்தின்படி அவரை ஆசீர்வதித்தார். (ஆதியாகமம் 26:13)

என் மாஸ்டர் பிளான் விருப்பப்படியல்ல எனக்கு நல்லதுன்னு நீங்க நினைக்கிறபடி, நீங்க எனக்காக பிளான் பண்ணினபடி செய்யுங்கப்பா. என்னுடைய ஆவிக்குரிய வாழ்க்கையில், உலக வாழ்க்கையில், சின்ன விஷயத்திலும், பெரிய விஷயத்திலும் ஒரு டிரஸ், பைக் வாங்கினாலும், பயணமானாலும், எல்லாமே உங்க சித்தம்படி, பிளான்படி நடக்க இயேசுவைப் போல என்னை முழு மனதோடு ஒப்புக்கொடுக்கிறேன் என்று சொல்லி அதற்கு சம்மதிப்பீர்கள் என்றால், செய்வீர்கள் என்றால் நீங்கள் உங்கள் மாஸ்டர் பிளான் படி அல்ல, உங்களது மாஸ்டர்ஸ் பிளான் படி தான் நடக்கிறீர்கள் என்று அறிந்து கொள்வீர்கள். நிச்சயமாக நீங்கள் சாத்தானால், தீயவர்களால் ஏமாற்றப்பட மாட்டீர்கள். உங்களது எதிர்காலம் ஆசீர்வாதமாக, பாதுகாப்பாக, பயனுள்ளதாக இருக்கும் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை. பரம குயவனாகிய இயேசு தாமே தமது கையில் இருக்கும் களிமண்ணாகிய உங்களை தமது பார்வைக்கு சரியாய் கண்டபடி (எரேமியா 18:1-6) பிளான் படி உங்களுக்கு குறித்திருக்கிறதை நிறைவேற்றி ஆசீர்வதிப்பாராக.

# காக்காவுக்கு வந்த கவலை

## ஹலோ குட்டீஸ் நல்லாயிருக்கீங்களா!

ஒருநாளு ஒரு காக்கா, ரொம்ப சோகமா இருந்துச்சாம், அதைப் பார்த்த தேவதூதன் காக்கா, காக்கா ஏன் சோகமா இருக்கிற என்று கேட்டான். அதுக்கு அந்த காக்கா சொன்னது, கடவுள் என்னை மட்டும் கருப்பா படைச்சிட்டார் என்று கண்ணீர் விட்டதோடு, அதோ அந்த அன்னப்பறவை மாதிரி நான் வெள்ளையா இல்லையே என்றது. உடனே தேவதூதன் அந்த காக்காவை ஒரு அன்னப்பறவையிடம் கூட்டிச்சென்று, நீ வெள்ளையாயிருப்பதை நினைச்சு சந்தோஷப்பட்டிருக்காயா என்று கேட்டதற்கு, அந்த அன்னப்பறவை ஒரு கிளியைக் காண்பித்து சொன்னது, இதோ இந்த கிளியைப் போல பச்சை நிறத்தில் நான் இல்லையே என்று குறைபட்டது. சரி என்று கிளியிடம் போய் கேட்டதற்கு, நான் மயிலை போல பலவர்ணத்திலிருந்தால் நன்றாயிருக்குமே என்றது. மயிலிடம் போய், நீ பல நிறத்திலிருப்பதால் சந்தோஷப்படுகிறாயா என்று கேட்டதற்கு, ஒவ்வொரு நாளும் என் அழகான தோகைக்காக என்னை வேட்டையாடுகிறார்கள். நான் தினமும் பயந்து பயந்து வாழ வேண்டியதாயிருக்கிறது என்று வேதனைப்பட்டது. தான் கருப்பாயிருக்கிறதை நினைச்சு கவலைப்பட்டதும், கடவுளைத் தேவையில்லாம குறை சொன்னதும் தவறு என்று அப்போதுதான் அந்த காக்காவுக்கு புரிஞ்சுச்சு. அதனால ஆண்டவரிடம் **sorry** இயேசப்பா என்று மனசுக்குள்ளே சொல்லிட்டு தேவதூதனுக்கு நன்றி சொல்லி சந்தோஷமாக பறந்து சென்றது அந்தக் காக்கா.

நான் அந்த பிள்ளைய மாதிரி அழகாய் இல்லையே, அந்த மாதிரி பாட முடியலையே, கலரா இல்லையே, வசதி இல்லையே என்று உங்களையே நினைச்சு நினைச்சு குறைப்பட்டுக் கொள்ளாதீங்க, என்ன குட்டீஸ் நீங்க எப்படி இருக்கீங்களோ அப்படியே உங்களை ஏற்றுக்கொண்டு ஆண்டவருக்கு நன்றி சொல்லுங்கள். இந்த காக்காவை போல கவலைப்படாதிருங்கள்.

**Ok Bye** குட்டீஸ்.

### ஜெபம்

அன்புள்ள இயேசப்பா நானும் நிறைய நேரம் எனக்கு இருக்கும் குறையை நினைத்து கவலைப்பட்டு அழுது **time**-ஐ எல்லாம் **waste** பண்ணிட்டேன். என்னைப் படைச்ச உங்களையும் துக்கப்படுத்திட்டேன். என்னை மன்னிச்சிருங்க, என்னை உங்க சாயலில, விசேஷித்தப் படைப்பா உருவாக்கினதற்காக நன்றி இயேசப்பா. எனக்கு நீங்க தந்திருக்கிற ஞானம், திறமைகளைப் பயன்படுத்தி உங்களை மகிமைப்படுத்த எனக்கு உதவி செய்யுங்க
இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.



### மனப்பாட வசனம்

காகங்களைக் கவனித்துப் பாருங்கள், அவைகள் விதைக்கிறதுமில்லை அறுக்கிறதுமில்லை, அவைகளுக்குப் பண்டசாலையுமில்லை, களஞ்சியமுமில்லை, இல்லாவிட்டாலும் அவைகளையும் தேவன் பிழைப்பூட்டுகிறார், பறவைகளைப் பார்க்கிலும் நீங்கள் எவ்வளவோ விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள். லூக்கா 12:24

# வாழ வைக்கும் தெய்வம் இயேசு



### சகோதரர். நவீன் – பெங்களூர்

நான் IT துறையில் பணிபுரிந்தேன், மாதம் 70 ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்கினேன். நண்பர்களின் தவறான ஆலோசனையால் வேலை வேண்டாம் என்று முடிவெடுத்து, எல்லா பணங்களையும் வாங்கிக் கொண்டு, வீட்டை விட்டு வெளியேறினேன். என்னிடம் பணம் இருந்தவரை என்னை சுற்றி நிறைய நண்பர்கள் இருந்தார்கள். பணம் எல்லாம் செலவான பின்பு என்னை தனியாக விட்டுச்சென்றார்கள். பணம் இல்லாததால் அம்மாவை தேடி வீட்டிற்குச் சென்றேன். சில நாட்கள் வீட்டில் இருந்துவிட்டு மீண்டும் வெளியே வந்து வேலை தேடினேன். எனக்கு எந்த வேலையும் நிரந்தரமாக கிடைக்கவில்லை. அதனால் கடந்த சில நாட்களாக மன உளைச்சலினால், ஏன் வாழவேண்டும் என்ற எண்ணத்தோடு வாழ்ந்துவந்தேன். இறுதியாக சாப்பிடவும் வழியில்லாமல் தண்ணீர் மட்டும் குடித்துக் கொண்டிருந்தேன். பிறகு தற்கொலை செய்து கொள்ள வேண்டும் என்று முடிவேடுத்தேன். அப்பொழுது தான் தங்களின் வெப்சைட்டில் இந்த வசனத்தை பார்த்தேன், என் தகப்பனும், என் தாயும் என்னைக் கைவிட்டாலும், கர்த்தர் என்னைச் சேர்த்துக் கொள்ளுவார் என்ற வார்த்தை என்னோடு பேசினது. பெற்றோரால், உடன்பிறந்தவர்களால், நண்பர்களால் கைவிடப்பட்டு இன்றைக்கு மரித்து விடவேண்டும் என்ற நோக்கத்தோடு இருந்த எனக்குள் கர்த்தர் என்னைக் கைவிடமாட்டார் என்ற வார்த்தை திரும்ப திரும்ப பேசிக் கொண்டே இருந்தது. இந்த வார்த்தையைப் பற்றி தெரிந்துகொள்ள தங்கள் ஊழியத்திற்கு தொலைபேசியில் தொடர்புகொண்டு விளக்கம் கேட்டேன், எனக்காக ஜெபிக்கச் சொன்னேன். சகோதரி அவர்கள் ஆலோசனை கொடுத்து, எனக்காக ஜெபித்தார்கள். அதன் பிறகு தற்கொலை எண்ணம் முற்றிலுமாக மாறினது. யார் என்னை கைவிட்டாலும் இயேசு என்னை நேசிக்கிறார், அவர் என்னை கைவிடமாட்டார் என்ற நம்பிக்கை எனக்குள் வந்தது. என்னை நேசிக்கும் இயேசுவுக்காக வாழ என்னை அர்ப்பணித்தேன். பிறகு நான் ஜெபித்தேன், இயேசு என்னை வாழ வைப்பார் என்று விசுவாசித்தேன், நான் இழந்த IT வேலை எனக்குத் திரும்ப கிடைத்தது. தற்போது நான் நன்றாக இருக்கிறேன். இயேசுவுக்கே மகிமை.

### சகோதரி. கமலா – மேட்டுப்பட்டி

நான் இயேசுவை அறியாத குடும்பத்தை சேர்ந்தவள். என் மதத்தில் பக்தி வைராக்கியமாய் இருந்தவள். ஆனால் என் குடும்பத்தில் பல பிரச்சனைகள், போராட்டங்கள் இருந்தது. எல்லா தெய்வங்களும் என்னை கைவிட்டு விட்டது நான் ஏன் வாழ வேண்டும், இரண்டு பிள்ளைகளோடு இறந்துவிட வேண்டும் என்ற சூழ்நிலையில் இருந்தேன். கடைசியாக நான் வானத்தையும் பூமியையும் படைத்த தேவன் இயேசுவை நோக்கி வானத்தின் வாசல் ஜெப மையத்திற்கு வந்தேன். இயேசுவை நோக்கிக் கூப்பிட்டேன், என் வீட்டில் இருந்த தேவன் விரும்பாத அனைத்தையும் தூக்கி எறிந்தேன். தொடர்ந்து ஜெபித்தேன், இயேசுவை விசுவாசித்தேன், என் பிள்ளைகள் நன்றாக படிக்கவும், நல்ல வேலையில் சேரவும் தேவன் கிருபை செய்தார். எங்கள் குடும்பத்தை தேவன் ஆசீர்வதித்து உறவினர்கள், ஊரார் முன்பாக உயர்த்தி வைத்திருக்கிறார். என் பெலவீனத்திலிருந்தும் எனக்கு சுகம் தந்திருக்கிறார். அவருக்கே எல்லா மகிமையும் உண்டாவதாக.



# இயேசு வாழ்கிறார் ஊழியத்தோடு இணைந்து சுவிசேஷ ஒளியை பரவ செய்யுங்கள்

தேவன், தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் தமது ஊழியத்தில் பங்கு பெறவேண்டுமென்று விரும்புகிறார்.அவரது நோக்கத்தை நிறைவேற்ற அவர் தமது பிள்ளைகளை பயன்படுத்துகிறார். நாம் வெறும் பார்வையாளராயிருப்பதை அவர் விரும்பாமல், அவரது ஊழியத்தின் பங்காளராக மாறுவதையே அவர் விரும்புகிறார்! நாம் கரையில் நிற்பதை விரும்பாமல் களத்தில் இறங்குவதையே அவர் விரும்புகிறார். அறிவிக்கப்படாத மக்களைச் சந்தித்து, சுவிசேஷத்தை கூறி, உலகை சுவிசேஷமயமாக்குகிற அந்த மகிமையான ஊழியத்தில் தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஈடுபட வேண்டும் என அவர் விரும்புகிறார்!

விளையச் செய்கிறவர் தேவனாக இருந்தாலும், விதைக்கிற வேலையையும், நீர்ப்பாய்ச்சுகிற வேலையையும் அவர் நமது கரங்களில் ஒப்படைத்திருக்கிறார் (1கொரிந்தியர்3:7). இக்கடைசி காலத்தில், தமது சித்தத்தை நிறைவேற்றுகிற பணியில் ஈடுபடவேண்டுமென கர்த்தர் விரும்புகிறார்.

வாருங்கள்! இக்கடைசி கால எழுப்புதல் சுவிசேஷ பணியில் இணைந்து அவரது நோக்கத்தை நிறைவேற்றுகிற ஊழியத்தின் பங்காளர்களாக மாறுவோமாக!

## 1) BANK TRANSFER

| | | | |
|---|---|---|---|
| A/C NAME | : JESUS LIVES TRUST | A/C NAME | : L.VINCENT RAJ |
| BRANCH | : KOCHADAI MADURAI | BRANCH | : MADURAI |
| BANK NAME | : UNION BANK OF INDIA | BANK NAME | : AXIS BANK |
| A/C.NO | : 493902010001022 | A/C.NO | : 109010100247030 |
| IFSC CODE | : UBIN0549398 | IFSC CODE | : UTIB0001765 |

## 2) இணையதளம்(WEBSITE)

WWW.JESUSLIVES.IN

ஸ்கேன் செய்யுங்கள்

## 3) காசோலை(CHEQUE)

JESUS LIVES TRUST OR L.VINCENT RAJ

## 4) GOOGLE PAY : GPAY(GOOGLE PAY)TO , 944 300 9333 ,7598359316

## 5) மணியார்டர்(E.M.O) : இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் 54 ஏ.ஐ.பி.இ.ஏ நகர், ஏ - காலனி பரவை ,மதுரை - 625 402

நமது இயேசு வாழ்கிறார் ஊழியத்திற்கென்று வங்கிக் கணக்கு மூலமாகவோ, இணையதளம் மூலமாகவோ, அல்லது GOOGLE PAY மூலமாகவோ அனுப்பலாம். காணிக்கை அனுப்பியபின் அதைக் குறித்த விபரத்தை 944 28 00 449 என்கிற இந்த எண்ணில் தொடர்பு கொண்டோ, அல்லது இதே எண்ணிற்கு WHATSAPP மூலமாகவோ, accounts@jesuslives.in மூலமாகவோ எங்களுக்கு தெரியப்படுத்தவும்.

**நடப்பு செய்திகள்**

# அறிகுறியே இல்லாமல் கண் பார்வையை நிரந்தரமாகப் பறிக்கும் நோய்

இந்தியாவின் கால்பங்கு மக்கள்தொகை கண்சார்ந்த பிரச்னைகளால் பாதிக்கப்பட்டுள்ளதாக சமீபத்திய ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதில் குணப்படுத்தக்கூடிய, சரியே செய்ய முடியாத, தடுத்து நிறுத்தக் கூடிய வகையிலான வெவ்வேறு விதமான கண் சார்ந்த பாதிப்புகள் உள்ளன.அதில் ஒன்றான கிளாக்கோமா சமீபத்தில் பலரையும் அச்சுறுத்தும் ஒரு பாதிப்பாக மாறியுள்ளது. காரணம் இது பல நேரங்களில் எந்த வித அறிகுறிகளும் இல்லாமல் தொடங்கி, ஒரு நபர் தனது கண்பார்வையை குறிப்பிட்ட அளவு இழந்த பிறகே தெரிய வருகிறது.இதனால், இழந்த கண்பார்வையை மீட்க முடியாத நிலையும் உருவாகிறது. உண்மையில் இந்த நோயின் அறிகுறிகள் என்ன? ஆரம்ப கட்டத்திலேயே அதை எப்படி கண்டறிவது? அதற்கான சிகிச்சைகள் என்ன என்பது குறித்து இந்த தொகுப்பில் காணலாம்.

**கிளாக்கோமா என்றால் என்ன?**

கிளாக்கோமா என்பது கண்களை பாதிக்கும் ஒரு நோய். கண்களை மூளையோடு இணைக்கும் நரம்புகளை இந்த நோய் பாதிக்கிறது.பிரிட்டிஷ் பொது சுகாதார சேவையின் **(NHS)** கூற்றுப்படி, கண்களில் குவியும் இயல்புக்கு மாறான திரவம் அதன் மீது அழுத்தத்தை அதிகரிப்பது மட்டுமின்றி நரம்புகளை சேதப்படுத்துகிறது.

**கிளாக்கோமாவின் அறிகுறிகள் என்ன?**

கிளாக்கோமா ஏற்படுகிற ஆரம்ப கட்டத்தில் எந்த விதமான அறிகுறிகளும் தெரிவதில்லை. இதனால் அதை பரிசோதனைகள் மூலம் மட்டுமே கண்டறிய முடியும்.இது பல ஆண்டுகளாக படிப்படியாக அதிகரிக்கிறது. இது படிப்படியாக முன்னேறி குறிப்பிட்ட அளவு பார்வை பாதிக்கப்படும் போது பாதிக்கபட்டவர்களால் தங்களை சுற்றி எதையும் பார்க்க முடியாது. உடனடியாக சரியான சிகிச்சை அளிக்காவிட்டால் முழுமையாக பார்வை பறிபோகவும் வாய்ப்புள்ளது.மங்கலான பார்வை மற்றும் பிரகாசமான விளக்குகளைச் சுற்றி வானவில் போன்ற வளையங்கள் தெரிவது போன்றவையும் கிளாக்கோமாவின் அறிகுறிகள் தான்.இந்த நோய் இரு கண்களையும் பாதித்தாலும், அவற்றில் ஒன்று கூடுதலாக பாதிக்கப்படலாம்.

**இதன் அறிகுறிகள் திடீரென்று தொடங்கும். அவற்றில் முக்கியமான மற்றும் பொதுவானவை.**

**கண்களில் கடுமையான வலி குமட்டல் மற்றும் வாந்தி கண்கள் சிவத்தல் தலைவலி கண்களைச் சுற்றி மென்மையாக மாறுதல் ஒளியைச் சுற்றி வட்டங்கள் தெரிவது மங்கலான தோற்றம்**

**எப்போது சிகிச்சை பெற வேண்டும்?**

இந்த குறைபாடு என்றில்லாமல், உங்கள் பார்வையில் எந்த விதமான குறைபாடு இருப்பதாக உங்களுக்கு சந்தேகம் வந்தாலும், உடனடியாக மருத்துவரை அணுகவும்.கிளாக்கோமாவின் ஆரம்ப நிலையிலேயே அதை கண்டறிந்து சிகிச்சை அளித்து விட வேண்டும். இல்லையென்றால் படிப்படியாக அதிகரித்து முழுமையாக பார்வை இழக்கும் அபாயம் உள்ளது.எனவே, மேற்காணும் ஏதேனும் அறிகுறிகளை உணர்ந்தாலே உடனடியாக மருத்துவமனைக்கு சென்று விட வேண்டும். இது ஒரு மருத்துவ அவசரநிலை என்பதை புரிந்துக் கொள்ள வேண்டும்.

**கிளாக்கோமாவின் வகைகள்**

கிளாக்கோமாவில் பல வகைகள் உள்ளது. ஆனால், இவற்றில் மிகவும் பொதுவான வகை ஓப்பன் ஆங்கில் கிளாக்கோமா **(open angle glaucoma)** ஆகும். இது பல ஆண்டுகளாக கண்ணுக்குள் இருந்து பொறுமையாக வளர்ச்சியடைகிறது.

அக்யூட் ஆங்கில் க்ளோஸர் கிளாக்கோமா **(Acute Angle Closure Glaucoma)** - இது மிகவும் அரிதானது. கண்ணுக்குள் திரவங்கள் பாயும் பாதை திடீரென தடைப்பட்டாலோ அல்லது சேதமடைந்தாலோ, கண்ணில் அழுத்தம் அதிகரிக்கிறது. இது கிளாக்கோமாவுக்கு வழிவகுக்கிறது.

இரண்டாம் நிலை கிளாக்கோமா **(Secondary Glaucoma)** - கண் அழற்சி நோய் அல்லது யுவைடிஸ் போன்ற எந்த விதமான கண் நோய்களினாலும் இது ஏற்படலாம்.

கான்ஜெனிட்டல் கிளாக்கோமா **(Congenital Glaucoma)** - இந்த வகை மிகவும் அரிதாக இளம் வயதிலேயே ஏற்படக்கூடிய ஒன்று. இதில் கண்களை அமைப்பு வழக்கத்திற்கு மாறானதாக இருக்கும்.

**கிளாக்கோமா ஏற்பட காரணம் என்ன?**

கிளாக்கோமா ஏற்பட பல காரணங்கள் உண்டு. கண்களில் காணப்படும் திரவம் அதன் பாதையில் சரியாக பயணிக்காத போது கிளாக்கோமா ஏற்படுகிறது. இது கண்ணில் எதிர்மறை அழுத்தத்தை உருவாக்குவதால், அது கண்களை மூளையுடன் இணைக்கும் பார்வை நரம்பை சேதப்படுத்துகிறது.கிளாக்கோமா உருவாகும் அபாயம் பல காரணங்களால் அதிகரிக்கிறது.

**வயது** - வயது முதிர்வு கிளாக்கோமா ஏற்படும் அபாயத்தை அதிகரிக்கிறது.

**இனம்** - ஆப்பிரிக்கர்கள், கரீபியர்கள் மற்றும் ஆசியர்களுக்கு கிளாக்கோமா ஏற்படும் அபாயம் அதிகம் உள்ளது. இவர்களில் 40 வயதை கடந்தவர்களுக்கு இந்த பிரச்னை ஏற்படுகிறது.

**குடும்பம்** - உங்கள் பெற்றோர் அல்லது உடன்பிறந்தவர்களில் ஒருவருக்கு கிளாக்கோமா இருந்தால், உங்களுக்கும் அது ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

**உடல்நலப் பிரச்சனைகள்** - பார்வைக் குறைபாடுகள் அல்லது நீரிழிவு நோயாளிகளுக்கு கிளாக்கோமா ஏற்படும் அபாயம் உள்ளது.கிளாக்கோமாவைத் தடுக்க முடியுமா என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. ஆனால், தொடர் கண் பரிசோதனைகள் மூலம், கிளாக்கோமாவை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து சிகிச்சை மூலம் குணப்படுத்தலாம்.

அறுவைசிகிச்சை - இதில் கண்ணில் உள்ள திரவம் வெளியேறும் பாதை மாற்றியமைக்கப்படுகிறது.

இந்த சிகிச்சைகளின் மூலம் இழந்த பார்வையை மீட்டெடுக்க முடியாது. மாறாக, மீதம் உள்ள பார்வை இழக்காமல் பார்த்துக் கொள்ளலாம். குறிப்பாக சிகிச்சையின் போது மருத்துவர்கள் பரிந்துரைக்கும் மருந்துகளை தவறாமல் எடுத்துக் கொள்ள வேண்டும். அதில் ஏதேனும் பக்க விளைவுகள் ஏற்பட்டால், மருத்துவரிடம் தெரிவிக்கவும். அனைவரும் வழக்கமான தொடர் கண்பரிசோதனைகள் மூலம் இந்த நோய் இருந்தால் ஆரம்பத்திலேயே கண்டறிந்து விடலாம். அப்படி குடும்பத்தில் ஒருவருக்கு இருப்பது தெரிய வந்தாலும் கூட, பிற குடும்ப உறுப்பினர்களும் இந்த பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

Owned & Published by: Bro.L.VincentRaj , & Editor Bro.L.VincentRaj
Published by Jesus Lives Trust, Yesuvai Thinam Parkiren
54,A.I.B.E.A-Nagar,Paravai,Madurai - 625402
Printed by: C.CHELLACHAMY,PRISM PRINTERS,Madurai



உத்தமபாளையத்தில்
மிஸ்பா உபவாச பிரார்த்தனை
மே
25 - 2024
சனிக்கிழமை
காலை 10.00 மணி
முதல் மதியம்
2.00 மணி வரை
தேவ செய்தி மற்றும் ஜெபம்
சகோதரர். L. வின்சென்ட்ராஜ்
சகோதரி. கலா வின்சென்ட்ராஜ்
இயேசு வாழ்கிறார் ஊழியங்கள், மதுரை.
இடம் :
மிஸ்பா மீட்டிங் ஹால்,
போஸ்ட் ஆபிஸ் தெரு,
உத்தமபாளையம்,
தேனி மாவட்டம்
தொடர்புக்கு – 94428 00449, 99521 80281, 99521 80233




Jesus Lives Ministries YouTube Channel-ல்
காணத் தவறாதீர்கள்
Jesus Lives MINISTRIES
LIVE
நேரலை நிகழ்ச்சி
கர்த்தாவே என்னை
கைதூக்கி விடும்
திங்கள் முதல் வெள்ளி வரை
இரவு 09:00 - 09:45 வரை
Bro. L. Vincentraj
Sis. Kala Vincent Raj
SUBSCRIBE AND WATCH ON JESUSLIVES MINISTRIES
jesuslives.in

Date of Publication on 20th (Every Month)
RNI NO .TNTAM/2000/00621 Postal Registration No. TN/MA/42/2024-2026
WPP Registration No. TN/WPP-40/SR/2024-2026
Date of Posting 27th (Every Month) Posted at Madurai R.M.S

திண்டுக்கல் மாவட்ட
அனைத்து கிறிஸ்தவ சபைகள் இணைந்து செம்பட்டியில் நடத்தும்




## ஏப்ரல் 30 செவ்வாய்கிழமை
## இரவு 9.30 மணி முதல் காலை 4.00 மணி வரை

தேவசெய்தி மற்றும் ஜெபம்
சகோதரர். எல். வின்சென்ட்ராஜ்
சகோதரி. கலா வின்சென்ட்ராஜ்

இடம்
வானத்தின் வாசல் எழுப்புதல் ஜெபமையம்
செம்பட்டி, திண்டுக்கல் மாவட்டம்

வாருங்கள் நம் தேசத்தின் எழுப்புதலுக்காக இணைந்து ஜெபிப்போம்
தொடர்புக்கு – 94 98 000 449, 944 28 00 449, 944 28 00 447

உங்கள் ஜெப விண்ணப்பங்களை அனுப்புங்கள் உங்களுக்காக ஜெபம் ஏறெடுக்கப்படும்
அனுப்ப வேண்டிய தொலைபேசி எண் - **94428 00449**

நமது இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்
அனைத்து சமூக ஊடகங்கள் மற்றும் இணையதளத்திலும் ஒளிபரப்பாகிறது

If Undelivered (Please Return To)
YESUVAI THINAM PARKIREN
54,A.I.B.E.A Nagar,Parvai
Madurai-625402
South India.